**தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 294 – தேசிய மிருக்க்காட்சி சாலைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய மிருகக்காட்சி சாலைத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்படாமை. | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதிளவு திட்டமிடப்படாமை. | 2.2.1 |
| | | 3. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு தயாராகுதல் | 2.1.2(இ) |
| | | 4. மிகை ஏற்பாடு | 2.7 |
| | | 5. பதவியணியின் பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்படாமை | 2.11(அ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் பேணப் படாமை<br>2. இணக்கமின்மை | 2.9<br>2.10 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும், | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வில் குறைபாடுகள்<br>2. சொத்துக்களை ஆவணப்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3(ஆ)<br>2.3(அ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறை சேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படு வதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதமாக சமர்ப்பித்தல் | 2.1.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான மீதிகள் அறவீடு செய்யப்படாமை. | 2.8 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல் கள் மேற்கொள்வதெனவும் | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்<br>2. செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள கருமங் களை நிறைவேற்றாமை.<br>3. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்<br>4. பெறுகை செய்முறை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.5<br>2.2.1<br>2.1.2(ஆ)<br>2.2.2 |
| 128(1)(ஓ) | செலவிடப்பட்ட ஏதேனும் செலவினமொன்று அல்லது பொறுப்பொன்று கடப்பாடொன் றாக இருந்த போதிலும், தமது செலவின விடயப் பரப்பு அல்லது எல்லைகள் அல்லது ஏனைய அதிகார வழங்கப்பட்ட நிதிஏற்பாடு ஒன்றிற்குள் வருமாறும் அது போதியளவு அதிகாரம் பெற்றுள்ளதெனவும் | ஏற்பாடு வரையறையை மிகைத்து பொறுப்புக்களில் ஆளாக்குதல் | 2.4 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டு கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிட்டுள்ள குறைபாடு கள் | 2.9(அ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 05 பிரதான கைப்பணிகள் காணப்பட்டன. திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் நலனோம்பு மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் எதிர்ப்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மிருக இனப்பெருக்கம் மற்றும் மிருகப் பாதுகாப்பு, மிருக நலனோம்பு, கண்காட்சிகள் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய கருமங்களுக்காக ரூபா 508.7 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கல்வி மற்றும் ஆய்வுகள் ஆகிய பிரதான கருமங்கள் அதில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 2.1.2 செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

ரிதியகம ஸபாரி மிருகக்காட்சி சாலையில் ஆசிய வலயம் மற்றும் பெங்கல் புலி வலயத்திற்காக மின்சார வேலிகள் நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 7 மில்லியன் மற்றும் ரூபா 0.80 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அந்த விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்**

தெஹிவல மிருக வைத்தியசாலை நிர்மாணித்தல் மற்றும் பின்னவல யானை சரணாலயத்தில் குளம் நவீனமயப்படுத்தல் ஆகிய 02 செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 72.97 மில்லியன் தொகை மற்றும் 34.81 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த கருமங்கள் முறையே 2018 ஜுன் 26 மற்றும் 2017 திசெம்பர் 09 திகதி வரை பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் 2018 ஜுலை 15 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு தயாராகுதல்**

திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 05 மற்றும் 09 இலக்குகளை இனங்கண்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்கண்டிருந்த போதிலும் இது தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினரை சரியாக இனங்கண்டிருக்கவில்லை. அதன் விளைவாக இந்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் திணைக்களத்தினால் மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது இந்த குறிக்கோள்களை நெருங்குவதற்கு முடிந்த அளவில் ஏற்பாடுகள் ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்டம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 ஜுலை 15 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.2 பெறுகை செய்முறையின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகள் பெறல்

### 2.2.1 பெறுகைத் திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது பெறு செய்முறைகளின் மூலம் திணைக்களத்திற்கு வழங்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 77.94 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 59.26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை திட்டம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப நிலை**

பெறுகை திட்டமிடும் போது, பெறுகை பகேஜ் பொழிப்பு, இனங்கண்ட பெறுகைத் தொடர்பாக காணப்படும் விஷேட அங்கீகாரத்தை பெறுவதற்கு தேவையான தயாரித்திருக்காததுடன் ஆரம்ப பெறுகை திட்டமும் தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) ஒப்பந்தத்திற்கு முரணான கட்டம்**

இந்த கட்டத்தின் கீழ் உசாத்துணை சேவைகளுக்காக மற்றும் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான விவரமான பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு ஒப்பந்த வேலை பகேஜ் மற்றும் பெறுகை கால அட்டவணை ஆகிய ஆவணங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஒப்பந்தத்திற்கு பின்னராக (ஒப்பந்த நிருவாகம்) கட்டம்**

ஒப்பந்த வேலை நிருவாகத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்துள்ள காசு வெளிப்பாய்ச்சல் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை செய்முறையை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தெஹிவல மிருகக்காட்சி சாலையின் 8 ஆம் இலக்க பாதையை நிர்மாணித்தல்**

(i) பெறுகைக் குறிக்கொள்கள் என சிக்கனம், வினைத்திறன், உற்பத்தித் திறனை நெருங்குவதற்காக மிகவும் நடைமுறை சாத்தியமான கிரய மதிப்பீடு மற்றும் கணியப் பட்டியல் (BOQ) தயாரித்தல் முக்கியமாக இருந்த போதிலும் இந்த மதிப்பீடு தயாரிக்கும் போது அதன் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 45,354,486 இற்கான தொகையில் முக்கிய கருமங்களில் ரூபா 13,792,486 இற்கான Meer Kat Ferret & Enclosure, Bird

Enclosure, Summer Hut ஆகிய கருமங்கள் நிறைவேற்றப்படாமல் செயற்திட்டம் முடிவாக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.3(இ) இன் பிரகாரம் பௌதீக அவசர தேவைக்காக 10 சதவீதம் வரை உச்ச மட்டத்தில் பணம் ஒதுக்க முடியுமெனினும் அந்த தொகை அங்கீகரிக்கப்பட்ட கணியப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மேற்கொள்ளப்படும் வித்தியாசங்கள் மற்றும் முரண்கள் தொடர்பாக கிரயத்துடன் இணைய வேண்டும். எவ்வாறாயினும் செயற்திட்டத்திற்கு புறம்பாக கூட்டுத்தொகை ரூபா 1,198,829 இற்கான வேலை நிச்சயமற்ற மற்றும் மேலதிக வேலையின் கீழ் கிரயமிடப்பட்டு நிர்மாணவேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) பாதை இலக்கம் 8 செயற்திட்டத்தின் மேலதிக வேலை என ரூபா 182,088 இற்கான செலவு ஒன்றினால் நீர் காட்சிக் கூடத்திற்கு அண்மையில் பார்வையாளர் பார்ப்போர் கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நீர்காட்சி கூடம் சிறந்த முறையில் காணக்கூடிய விதமாக பார்ப்போர்கூடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த நீர் காட்சிக் கூடத்திற்கு அசுத்த நீர் அனுப்பப்படுவதினால் நீர் அசுத்தப்பட்டுள்ள விதம் பௌதீகப் பரிசோதனையின் போது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் பார்போர் கூடத்தில் நிர்மாணவேலை உற்பத்தித் திறன் உள்ளதாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக 10,000 சதுர அடி அளவினைக் கொண்ட கட்டிடமொன்றினை வாடகைக்கு எடுப்பதற்காக கூறுவிலைகள் அழைத்தல்**

நுழைபாதை மற்றும் 10 வாகனங்கள் நிறுத்தி வைக்கக் கூடிய இடவசதி என்பன முக்கிய விவரக் குறிப்பாக இருந்த போதிலும் அதனை பூர்த்தி செய்யாத விலைமனுதாரர்களுக்கு அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.8.4(உ) இற்கு முரணான விலைமனு வழங்கப்பட்டிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்கள் ஆவணப்படுத்தல்**

2017 ஜுன் 28 ஆம் திகதியும் 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் பொதுசன ஊடக அமைச்சின் கீழ் காணப்படும் கொம்டேலர்ஜெனரல் அலுவலகத்திற்கு வாகனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள், நிர்மாண வேலைகள், கட்டிடங்கள், காணி மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகிய சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதி 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஜுன் 30 திகதிக்கு

முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் பின்னவல யானை சரணாயலகத்தில் பாதுகாப்புப் பிரிவு மற்றும் வாகொல்ல புதிய மிருகக்காட்சி சாலை நூலகத்திற்காக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆண்டிற்கான கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய விதப்புரைகளின் பிரகாரம் பின்னவல யானை சரணாலய களஞ்சியத்தில் மற்றும் தெஹிவல தேசிய மிருகக்காட்சி சாலை நூலகத்தில் பல வருட காலமாக காணப்படும் பழுதடைந்த பொருட்கள் அகற்றப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டது.

## 2.4 ஈடுபாட்டு பொறுப்புக்களும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து ஈடுபாட்டு பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 288/2017 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்க 06 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 13.14 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 0.19 மில்லியன் சேமிப்பை மிகைத்து ரூபா 8.82 மில்லியன் ஈடுபாட்டு பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் அணுகியிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் தன்மை இன்றி காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வைப்புக் கணக்கில் இருந்து கொடுப்பனவு செய்வதற்காக இரண்டு உத்தியோத்தர்கள் செலவுகளை சான்றுபடுத்த வேண்டுமெனினும் ரூபா 2,924,314 தொகை பெறுமதியான 6 உறுதிச் சான்றுகளுக்கு ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் செலவுகளை சான்றுபடுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 1,158,062 தொகை பெறுமதியான 02 உறுதிச் சான்றுகளை அங்கீகரிக்காமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரிய 2016 ஆண்டில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையிலுள்ள கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | தொடர்புடைய விடயம் |
|---|---|
| பந்தி இலக்கம் | |
| 3.10(i) | பின்னவல மற்றும் வாகொல்ல காணிகளை உரித்தாக்காமை |
| 3.10(ii) | 79 ஏக்கர் 01 ரூட் 27 பர்சஸ் அளவான 08 காணித் துண்டுகளை உரித்தாக்காமை |

## 2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 172.20 | 172.08 | 0.12 | 0.07 |
| | மூலதன | 647.03 | 351.42 | 295.60 | 45.69 |
| | **மொத்தம்** | **819.23** | **523.50** | **295.72** | **36.10** |
| 2014 | மீண்டுவரும் | 221.75 | 219.10 | 2.65 | 1.19 |
| | மூலதன | 516.98 | 163.31 | 353.67 | 68.41 |
| | **மொத்தம்** | **738.73** | **383.31** | **355.42** | **48.11** |
| 2015 | மீண்டுவரும் | 299.78 | 220.00 | 1.75 | 0.79 |
| | மூலதன | 596.65 | 564.15 | 32.50 | 5.45 |
| | **மொத்தம்** | **896.43** | **863.23** | **33.20** | **3.70** |
| 2016 | மீண்டுவரும் | 345.21 | 344.21 | 1.00 | 0.29 |
| | மூலதன | 539.70 | 453.40 | 86.30 | 15.99 |
| | **மொத்தம்** | **884.91** | **797.61** | **87.30** | **9.86** |
| 2017 | மீண்டுவரும் | 379.16 | 375.90 | 3.26 | 0.86 |
| | மூலதன | 508.70 | 451.87 | 56.83 | 11.17 |
| | **மொத்தம்** | **887.86** | **827.77** | **60.09** | **6.76** |

**மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்**

மீளாய்வாண்டின் போது 04 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயத்திற்கான தேறிய ஏற்பாடுகளில் 14 சதவீதம் முதல் 54 சதவீதம் வரை வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29401 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 30 | 29.86 | 14 | 15.37 | 90 | 61.83 |

**(ஆ) நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 2,426,092 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சு முதல் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்குத் தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

**2.9 பதிவேடுகள் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தின் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகபூர்வ தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) பிரகாரம் 26 ஆம் பிண்ணிணைப்பு | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணை பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மின் உபகரணங்கள் தொடர் பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 ஏற்பாடு களின் பிரகாரம் படிவம் ஜீ.ஏ.என். 20 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | பெறுகைகள் குழுவினதும் தொழிநுட்ப மதிப்பாய்வு குழு வினதும் தினவரவு பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை 2.11.2 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | பொருட் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 751 மற்றும் நிதிப்பிரமாணம் 763 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | கணினி, துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதி ஐஏஐ/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | ஆளுக்குரிய சம்பளப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | நாளது வரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | வாகன சம்பவக் குறிப்பேடு | நிதிப்பிரமாணம் 1645(அ) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 படிவம் | நாளது வரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. |

**2.10 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

2015 திசெம்பர் 11 திகதி பீஎன்டீ/04/08/0/59 இலக்கங் கொண்ட அரச நிதி திணைக்களத்தின் பொது கடிதத்தின் பிரகாரம் அனைத்து பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும் தேசிய மிருகக் காட்சிசாலைகளுக்கு 2017 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 976.20 மில்லியன் நலனோம்பு மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 217.02 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 0.31 மில்லியன் தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 24 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 230 | 166 | 64 |
| (iv) | ஆரம்ப நிலை | 621 | 504 | 117 |
| | மொத்தம் | 882 | 695 | 187 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

திணைக்களத்தினால் நிலைபெறுதகு அபிவிருத்தி வன சீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு 2016 ஆண்டு முதல் சாரதி ஒருவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

### (ஆ) பதவியணி பயிற்சி வழங்கல்

மீளாய்வாண்டின் போது பயிற்சி வழங்கல் அலுவல்கள் திட்டமிடப்பட்டமையினால் ஆரம்ப, இரண்டாம் தர, பதவியணி தரங்களைச் சேர்ந்த 641 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஏதும் வழங்கியிருக்கவில்லை.